*செய்தி வெளியீடு எண்:21* *நாள்:11.09.2019*

**தேனி மாவட்டம்**
**வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

*தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, உள்ளாட்சித்துறை, பொது சுகாதாரத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியத்துறை, தீயணைப்பு மீட்பு பணிகள் துறை, காவல் துறை மற்றும் இதர தொடர்புடைய அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் (10.09.2019) நேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,*

*வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ளதால், மழை நீர் தேங்கும் தாழ்வான பகுதிகளை கண்டறிந்து மழை நீரை வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பாதிப்படைந்த மக்கள் தங்குவதற்கு இடவசதி மற்றும் முகாம்களுக்கு ஏற்பாடு செய்திடவும், இயற்கை பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு அறையில் தேவையான வயர்லெஸ் கருவிகளை இணைத்து பொதுமக்கள் எளிதில் தொடர்பு கொள்ள வசதிகளை ஏற்படுத்திடவும், வெள்ளம் சூழ்லும் பகுதிகளுக்கு போதிய பாதுகாப்பு அளித்திடவும், பொதுப்பணித்துறை மற்றும் உள்ளாட்சித்துறையினர் கட்டுப்பாட்டிற்குள் உள்ள கண்மாய்களில் உடைப்பு ஏற்படாமல் பராமரித்திடவும், உடைப்புகள் ஏற்படும் பட்சத்தில் அவற்றை சீரமைப்பதற்கு போதுமான மணல் மூட்டைகளை தயார் நிலையில் வைத்திட வேண்டும்.*

*சுகாதாரத்துறையின் மூலம் மருத்துவ குழுக்களை தயார்நிலையில் வைத்திருக்கவும், உயிர்காக்கும் மருந்துகள், தொற்றுநோய் வராமலிருக்க தேவையான நோய்தடுப்பு மருந்துகளை இருப்பு வைத்திருக்கவும், சுகாதாரமான குடிநீர் வழங்குதலை உறுதி செய்தல், குளோரின் ஏற்றம் செய்தல், தண்ணீர் மாசுபடுவதை தடுத்தல், நடமாடும் மருத்துவ வசதி போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும். தீயணைப்புத்துறையினர் பயிற்சி பெற்ற நீச்சல் வீரர்களை எப்பொழுதும் தயார் நிலையிலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பதுகாப்பாக தங்க வைக்க தேவையான பள்ளி கட்டிடங்கள், திருமண மண்டபங்கள் மற்றும் சமுதாயக் கூடங்கள் தயார் நிலையில் வைத்திருக்கவும், மழைக்காலங்களில் சீரான மின்சாரம் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.*

*கால்நடை பாரமரிப்புத்துறையின் சார்பில் மழையின் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்படும் தொற்று நோயினை தடுத்திட தேவையான மருந்து பொருட்கள் மற்றும் உணவு பொருட்கள் இருப்பில் உள்ளதை உறுதி செய்திட வேண்டும். நெடுஞ்சாலைத்துறையினர் பாதிப்புக்குள்ளாகும், பகுதிகளில் அவசரகாலங்களில் பயன்படுத்த மாற்று சாலை வசதிகளையும் கண்டறிந்து வைத்திருக்க வேண்டும். வடகிழக்கு பருவமழை காலங்களில் அவரச தேவைக்காக பம்ப்செட், ஜெனரேட்டர், கையடக்க மரஅறுவை கருவி மற்றும் பிற வளங்களின் பட்டியல் அவற்றின் உரிமையாளர் விபரங்களை சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள வேளாண்மை பொறியியல் துறை அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பெற்று வைத்திருக்க வேண்டும்.*

மேலும், மாவட்டத்தில் இயங்கும் 12 மழை மானி நிலையங்களை ஆய்வு செய்து பராமரித்திடவும், நீர்நிலை ஆதாரங்களில் உள்ள முட்செடிகளை அகற்றி வாய்க்கால்களில் தண்ணீர் விரைந்து வழிந்தோடுவதற்கு வழிவகை செய்திடவும், சாலைகளில் எதிர்பாராத விதமாக விழும் சாலையோர மரங்களால் ஏற்படும் தடைகளை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தியாவசியப்பொருட்களான அரிசி, மண்ணெண்ணெய், காலி சாக்கு பைகள் ஆகியவற்றினை போதுமான அளவு இருப்பு வைத்திடவும், தினசரி மழை அளவு, அணைகளில் நீர் மட்ட விவரம், கால்நடைகள், குடிசைகள், பயிர் மற்றும் உள் கட்டமைப்புகள் சேதாரம் குறித்து உடனுக்குடன் மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் தெரிவிப்பதோடு இணையதளத்திலும் பதிவேற்றம் செய்திட வேண்டும்.

மழைமானியை பராமரிக்கும் துறையினர் தினந்தோறும் காலை 7 மணிக்குள்ளும், மாலை 3 மணிக்குள்ளும் மழை அளவினை கணக்கிட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட வேண்டும். மழை வெள்ளத்தினால் பாதிக்கப்படும் இடங்களை கண்டறிந்து அதிலிருந்து மீள்வது குறித்த ஒத்திகை நிகழ்ச்சிகள் நடத்திட வேண்டும். மேலும், மழை சேதங்கள் குறித்து தகவல்களை பொதுமக்கள் கட்டணமில்லா தொலைபேசி எண் 1077, 04546-261093 தொலைபேசி எண் மற்றும் கைபேசி எண் 94877 71077 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தங்களது குறைகளை தெரிவித்து நிவர்த்தி அடைந்திடும் பொருட்டும், **TNSMART** செயலின் முக்கியத்துவம் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களும் தங்கள் துறை பணியாளர்களுக்கும், பொது மக்களுக்கும் எடுத்துரைத்து போதிய விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும் என தெரிவித்தார்.

கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.பாஸ்கரன், மாவட்ட வன அலுவலர் எஸ்.கௌதம், இ.வ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் ச.கந்தசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, வருவாய் கோட்டாட்சியர்கள் ச.ஜெயப்பிரித்தா, மு.சாந்தி, உதவி ஆட்சியர் (பயிற்சி) எஸ்.பாலசந்தர், இ.ஆ.ப., உதவி ஆணையர் (கலால்) முனைவர் இரா.இராஜா, மாவட்ட வழங்கல அலுவலர் இ.கார்த்திகேயினி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் எம்.முருகசெல்வி, வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) சத்தியபாமா மற்றும் அனைத்து வட்டாட்சியர்கள், நகராட்சி ஆணையாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**